| Page No.3 | |
|---|---|
| **<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>** | |
| நாள் | 18.02.2025 |
| O.S. No. | 376/2023 |
| வா.சா.1 | பருச்சுரி சுஸ்மிதா |

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18–ம் நாள் பருச்சுரி சுஸ்மிதா என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பருச்சுரி சுஸ்மிதா | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

<u>முதல் விசாரணை –</u>
(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

நான் இவ்வழக்கில் வாதியான வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது முதல் விசாரணைக்கான சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பில் கீழ் கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன. 1) 31.10.2016ஆம் தேதியிட்ட கடன் விண்ணப்பத்தின் அசல் **வா.சா.ஆ.1**, 2) 31.10.2016ஆம் தேதியிட்ட கடன் அனுமதி குறிப்பாணையின் அசல் **வா.சா.ஆ.2**, 3) 31.10.2016ஆம் தேதியிட்ட கல்விக்கடன் ஒப்பந்தத்தின் அசல் **வா.சா.ஆ.3**, 4) 22.06.2021ஆம் தேதியிட்ட கடன் நிலுவைத்தொகை ஒப்புதல் கடிதத்தின் அசல் **வா.சா.ஆ.4,** 5) 28.02.2023ஆம் தேதியிட்ட கணக்கு பட்டியலின் பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 6) 25.10.2023ஆம் தேதியிட்ட கடன் நிலுவைத்தொகை ஒப்புதல் கடிதத்தின் அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுவில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.